THIRU A. R. DAMODARAN : In view of the fact that frequent controversies occur in the State Transport Department between the conductor and passengers, will the Government consider the desirability of appointing dumb people as conductors—physically handicapped—in the State Transport Department? (Laughter)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த நாட்டில் யாரையும் ஊமைகளாக, செவிடர்களாக ஆக்க இந்த அரசாங்கம் விரும்பவில்லை.

Sennampatti Anicut.

* 17. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the amount of estimate at which the Sennampatti Anicut Scheme in Aruppukkottai taluk, Ramanathapuram district has been prepared;

(b) whether the Government have sanctioned the scheme; and

(c) if so, when the work will be started?

சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டம்

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை தாலுகாவில் சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டத்தை எவ்வளவு மதிப்பீட்டுத் தொகையில் தயாரித்துள்ளார்கள்?

(இ) இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி அளித்து விட்டதா?

(உ) ஆம் எனில், வேலை எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இராமநாதபுரத்தில் அருப்புக்கோட்டை வட்டத்தில் கவுண்ட நதிக்குக் குறுக்கே ஒரு அணை கட்டுவதற்காக, 24.60 லட்சம் ரூபாய் செலவில், வரை படங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

(உ) இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு, புதிய பாசன நிலங்கள் எவ்வளவு இதன் கீழ் வரும் என்பதைத் தெரிவிப்பார்களா?

1972 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, திட்டத்தினுடைய மதிப்பீடு 24.60 லட்சம் ரூபாய். வரைபடங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. எத்தனை ஆயக்கட்டு என்ற விவரம் இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் நீண்டகாலமாக அருப்புக்கோட்டை தாலுகா மக்களால் பல முறைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக இந்தத் தாலுகாவில் மக்கள் விவசாயத்தில் இருக்கிற காரணத்தினால் நீர்ப்பாசன சம்பந்தமாக 20 கண்மாய்களுக்கு மேல் இருக்கின்றன. ஒரு போக நீர்ப்பாசனத்திற்கு உதவியாக இதை விரைவில் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். குறிப்பிட்ட கால வரையறை நிர்ணயித்து அந்தக் கால வரையறைக்குள் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நீரியல் விவரங்களை முடிவு செய்த பிறகு கவுண்ட நதியில் அணை கட்டும் திட்டம் தேவையென்று சொன்னால் சென்னம்பட்டியில் அணை கட்டும் வேலை செயல்படுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை கவனத்தில் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

Bridge across the river Chinnar.

* 18. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to build a bridge across the river Chinnar in Hogenakkal area; and

(*b*) if so, the details thereof?

சின்னாற்றுக்குக் குறுக்கே பாலம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஒகனேக்கல் பகுதியில் சின்னாற்றுக்குக் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையிலுள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.